UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
RECEIVED
25-6-1984
PERIODICALS
LIBRARY

விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஆனி 11 நம்ழா 24 இதழ் 131
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 25-6-84

மட்டக்களப்பில்

## கடவுச்சீட்டு விநியோகம்: தபாற் கந்தோரில் மட்டுமே!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில்இன்றுமுதல் பொதுமக்கள் தமது பாஸ் போட்டுகளை தபாற்கந்தோரில் நேரில் சென்றே பெற்றுக் கொள்ளமுடியும்,

இதுவரை இந்த பாஸ் போர்ட் விநியோகம் தபால் மூலம் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வந்தது. மட்டக்களப்பு செங்கலடி பகுதிகளில் இந்த பாஸ்போர்ட் விநியோகம் தபால்சேவை மூலம் நடைபெறுவதன் மூலம் சில மோசடி வேலைகள் நடைபெற்றது தெரியவந்ததைத் தொடர்ந்து மட்டக்களப்பு தபால் அத்தியட்சர் தபால் மா அதிபருடன் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து தபாற்கந்தோரில் இவற்றை பெறவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. [சூ]

# ‘லலித்’ திடீர் யாழ். விஜயம்

## முக்கிய பிரச்னைகள் குறித்து ஆராய்ந்தார்

(கே. ஜி. எம்)

**யாழ்ப்பாணத்துக்கு நேற்றுக்காலை திடீர் விஜயமொன்றை மேற்கொண்ட தேசியபந்தோபஸ்து அமைச்சர் திரு.லலித்அத்துலத்முதலி முக்கியமான சில பிரச்னைகள் குறித்து அரசு அதிகாரிகளுடனும், சம்பந்பட்ட பிரதிநிதிகளுடனும் ஆலோசனை நடத்தினர்.**

**மூன்று தினங்களில் புதுடில்லி சென்று ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவையும், பாரதப்பிரதமர் திருமதி இந்திரா காந்தியையும் சந்திக்க விருக்கும் அமைச்சர் லலித், முக்கியமான சில விஷயங்கள் குறிதது, குறிப்பாக இலங்கை மீனவர்களின் கடற்றெழில் பிரச்னை தொடர்பாக விரிவாக ஆராய்ந்ததாக அறியப்படுகிறது.**

தேசிய பந்தோபஸ்துஅமைச்சரும் பிரதி பாதுகாப்பமைச்சருமான திரு. லலித் அத்துலத்முதலி நேற்றுக்காலை திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்

### ஒரு மணிநேரம் நடந்த மாநாடு

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நேற்றுக்காலை பத்துமணிமுதல் பதினொரு மணிவரை பல்வேறு விஷயங்கள் குறித்தும் அமைச்சர் லலித் ஆராய்ந்தார். அமைச்சர் லலித் அத்துலத்முதலியுடன் இராணுவத்தளபதி பிரிகேடியர் வீரதுங்காவும் வந்திருந்தார்.

நேற்றுக்காலையில் முதலில் நடைபெற்ற சந்திப்பில் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, யாழ். மாவட்ட இணைப்பதிகாரி பிரிகேடியர் திரு. ஜி. டி, என். செனிவரத்தின. கேர்ணல் ஆரியபெரும, கடற்றொழிலாளர்களின் நலன்களைக் கவனிப்பதற்காக நியமனம்பெற்ற டாக்டர் ஜே. பி; சி. பிலிப், வடமாகாண மீன்பிடித் தொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாஜத் தலைவர் திரு. கே. எஸ். பொன்னுத்துரை, யாழ். மாவட்ட கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர் திரு. கே. ரி. சிவஞானம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதே நேரத்தில் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு, லலித் அத்துலத் முதலி யாழ். பல்கலைக்கழ மாணவர் குழுவினருடன் நேற்றுக்காலை பேச்சுவார்த்தை நடத்தினர்.

பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் நேற்றுக்காலை நடைபெற்ற இப்பேச்சுவார்தையின்போது யாழ். அரசாங்க அதிபர் திரு, தேவநேசன் நேசையா பல்கலைக்கழக மாணவர் ஆலோசகர் பேராசிரியர் எஸ்: மகேஸ்வரன் பல்கலைக்கழக பதிவாளர் மற்றும் நான்கு மாணவர்கள் கலந்துகொண்டனர். சுமார் 10 மணியளவில் இப்பேச்சுக்கள் நடைபெற்றன.

யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் ஒரு பகுதி கோரிக்கைகள் அமைச்சரினுல் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் ஒரு பகுதி கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளாத வகையிலும் பேச்சுவார்த்தை முடிவுற்றதாக மாணவர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

அமைச்சருடன் நடத்திய இப்பேச்சு வார்த்தைகள் பற்றி இன்று காலை யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் கூடி ஆராய்வார்கள்.

அமைச்சருடன் நடத்திய பேச்சுக்களின் சகல விபரங்களையும் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட மாணவர்கள் ஏனைய மாணவர்களுக்கு விளக்குவார்கள். தொடர்ந்தும்

[8ம் பக்கம் பார்க்க)

## சந்தேகநபர் பிணையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். கஸ்தூரியார் வீதி மோட்டார் சைக்கிள் விபத்தில் கைதான சந்தேகநபர் 3000 ரூபா காசுப்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

யாழ். மேலதிக நீதவான் கே. பி. எஸ். வரதராசா முன்னிலையில் இவர் ஆஜர் செய்யப்பட்டார்.

சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி பா. தவபாலன் ஆஜரானுர்.

கஸ்தூரியார் வீதி மோட்டார் சைக்கிள் விபத்தில் கந்தையா என்பவர் பலியானதைத்தொடர்ந்து மோட்டார் சைக்கிள் உரிமையாளரான சந்தேகநபர் எஸ், கணேசலிங்கம் ரிமாண்டில் வைக்கப்பட்டார். [க]

## சிகிச்சைக்குப்பின் மரணமானுர்

(யாழ்ப்பாணம்)

நச்சுத்திராவகம் அருந்திய பின்னர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு உயிர் பிழைத்தவர் வீடு சென்று சில நாட்களின் பின்னர் மரணமானுர்.

அளவெட்டியைச் சேர்ந்த 46 வயதான எஸ். கந்தசாமி என்பவரே மரணமானவராவார்.

நச்சுத்திராவகம் அருந்திய பின்னர் ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்குப் பின்னர் சுகமடைந்து வீடு சென்றவர் சில தினங்களின் பின் வாந்தி எடுத்து மீண்டும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானுர். (க)

## பாடசாலைக்கு செல்லுமாறு கோரிக்கை

(கொழும்பு)

சகல பாடசாலைகளும் இன்று வழமைபோல் நடைபெற வேண்டுமென்றும் ஆசிரியர்களும் மாணவர்களும் கட்டாயமாக பாடசாலைக்கு செல்ல வேண்டுமென்றும் கல்வி அமைச்சு கோரிக்கைவிடுத்துள்ளது.

இன்று முன்னறிவித்தல் கொடுக்காது பாடசாலைக்கு சமுகம் கொடுக்காத ஆசிரியர்கள் யாவரும் பதவிகளை இழந்தவர்களாகக கருதப்படுவார்கள். மாணவர்களும் தகுந்த காரணமின்றிப் பாடசாலைக்குச் செல்லாமல்விடக்கூடாது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இன்றையதினம் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுடன் பாடசாலைக்குச் செல்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தேசிய

(8ம் பக்கம் பார்க்க)

பஸ்-மாட்டுவண்டி மோதல்

## மூதாட்டி பலி! ஒருவருக்கு காயம்

(மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற பஸ்-மாட்டு வண்டி மோதலில் 72 வயது மூதாட்டி ஒருவர் பலியானுர். அவரது மகள்படுகாயமடைந்தார்

மட்டக்களப்பு தாழன்குடா வேடன் கட்டு முனை என்ற இடத்தில் இந்த விபத்து நடந்துள்ளது.

இறந்தவரான வீ. சங்குபதி என்ற மூதாட்டியும் அவரது மகள் இராமமணி [35 வயது] அயல் கிராமமொன்றில் கண் சிகிச்சை முகாமுக்குச் சென்று விட்டு மாட்டுவண்டியில் திரும்பிக் கொண்டிருக்கையில், கல்முனையிலிருந்து மட்டக்

(8-ம் பக்கம் பார்க்க)

## ‘யுனிசெவ்’ திட்டத்தின்கீழ் நீர் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

‘யுனிசெவ்’ அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், இவ்வருடத்திற்குள், பொம்மைவெளி, அரியாலை கிழக்கு, அரியாலை மேற்கு, யமுனுரி ஆகியநான்கு இடங்களில் நீர்விநியோகத் திட்டம் ஆரம்பிக்கப்படும்.

இத்திட்டத்தில் நான்கு குழாய் நீர்கிணறுகள் அமைக்கப்படும்.

யாழ். மாநகரசபை கமிட்டி அறையில் நேற்று நடந்த சன சமூகநிலைய பிரதிநிதிகள் கூட்டத்தில் யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் ‘யுனிசெவ்’ அபிவிருத்தித்திட்டங்கள் பற்றி விளக்கமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:-

‘‘அபிவிருத்திசெய்யும் பகுதிகளில், சமூக அபிவிருத்திக் குழுக்கள் அமைக்கப்படும். இக்குழுக்களின் செயல்பாடுகள் பற்றி அடுத்த ஞாயிற்றுக்கிழமை ஆராய்ந்து முடிவு செய்யப்படும்.

‘‘இவ்வருடத்திட்டத்தில் 40 மலகூடங்களுக்குபாரியகுளி வீதம் 10 குளிகள் அமைக்கப்படும். இத்துடன் 5 பொதுக் கிணறுகள் அமைக்கப்படும். கிணறுகள் அமைப்பதற்கான இடங்கள் தெரிவுசெய்யப்படும். இத்திட்டங்கள் யாவும் இவ்வருடத்திற்குள் பூர்த்தியாகவேண்டும்.’’ (க)

## கடத்தல் முறியடிப்பு! ரூ. 7,800 அபராதம்!!

(யாழ்ப்பாணம்)

சுமார் 17,000 ரூபா பெறுமதியான 3.5 இந்திய சாரங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. ஆனையிறவில் வைத்து சாவகச்சேரி பொலிஸார் இச்சாரங்களை கைப்பற்றியதுடன். சந்தேகநபரையும் கைதுசெய்து சுங்கப்பகுதியிடம் ஒப்படைத்தனர்.

சுங்கசேகரிப்பாளர் திரு. எஸ். கணேஷ் விசாரணை நடத்திய பின் 7800 ரூபா அபராதம் விதித்தார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

HY - LINE ஒரு நாள் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும் லக்ஷ்மி றேடஸ், இணுவில் வீதி, மானிப்பாய். துர்க்கா என்ரபிறைஸ் கே.கே. எஸ்.ரேட், இணுவில், (அண்ணு இன்டஸ்றீஸ்). 425

மல்லாகம், Courts Roadஇல் 4 1/4 பரப்பு காணி விற்பனைக்குண்டு, விபரங்களுக்கு: திருமதி இ. நாகேந்திரம், 46, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், 448

கோப்பாயில் தபாற்கந்தோர்ஒழுங்கையில் 7 பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு: விபரங்களுக்கு: ''ஷப்ரு'' 207, மின் சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 22073. (449)

கொழும்புத்துறை நெடுங்குளம் ரேட்டில் 1 3/4 பரப்பு வெற்றுக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கா. சண்முகநாதன், விபுலானந்தர் வீதி, புங்கங்குளம், அரியாலை. 452

உங்கள் இல்லங்களை அழகு படுத்துதற்கு அழகிய வண்ணக்கலர் மீன்களை வாங்குவதற்கு இன்றே தொடர்பு கொள்ளுங்கள். இதுபற்றிய மேலும் விபரங்களை நேரில் பெறலாம். தொடர்பு: நன்னீர் மீன் விற்பனையாளர் A.C. இராசக்கோன், 28, மத்திய மேற்கு வீதி, [றெக்கிளமேசன் தண்ணீர்த் தாங்கி அருகில்] குருநகர். 461

கண்டிவீதியிலிருந்து 300யார் தொலைவில் எழுதுமட்டுவாள் நாகர்கோவில் வீதியில் (குடியிருப்புக்கு மத்தியிலும், மின் வசதி கூடிய இடத்திலும்) 6 ஏக்கர் தென்னந்தோட்டம் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: புதிய இலக்கம் 275, பலாலி வீதி கந்தர்மடம், 463

உரும்பராய்ச் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் போகும் பெரிய தெருப் பக்கமாகக் கால் மைல் தூரத்தில் குடியிருக்கக் கூடிய காணி கிணற்றுடன் இரண்டு பரப்பு விற்பனைக்கு உண்டு. நேரில் அல்லது கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும். தரகர் தேவையில்லை. க.கிருஷ்ண பிள்ளை, கொப்பிட்டி, முருகமூர்த்தி கோயிலடி, உடுவில், சுன்னுகம். 476

## விற்பனைக்கு

திருநெல்வேலி சந்தியில் சதுரமான காணித்துண்டும், 1 சிறீ Morris Minor காரும் உடனே விற்கப்படும். 73/1 பலாலி ரேட், கந்தர்மடம். 482

1½ மாத ரேவயிட் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. பிள்ளையார் ஸ்ரோர்ஸ் சாவகச்சேரி. 481

Bairaha Farms வெள்ளை, பிறவுண் பேட்டுக்குஞ்சுகள் சேவற்குஞ்சுகள் யூலைமாதம் 16, 30 ந் திகதிகளில் விநியோகிக்கப்படும் பதிவு செய்க. சற்குணராசா அன் பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில், 380

''செற்ஞு பாம்'' பேட்டு கோழிகுஞ்சு (B.300. B,380) யும் றெஸ் புறொயிலரும் சாவற்குஞ்சும் 17 - 7 - 84 காலை வினியோகிக்கப்படும் தொகையாக வேண்டுவோருக்கு கழிவுண்டு தேவையானோர் உடனடியாக தொடர்பு கொள்ளவும். விபரம்: R.S. K. Industry, R. S. கிருஷ்ணமோகன், முருகபதி, (டச்சுரேட்) உடுவில். 477

தச்சு இயந்திரம் இத்தாலி (சாம்கோ) 3 வேலை செய்வது ரூ. 42,000, 6 வேலை ரூ.75,000 கடன் வசதி செய்து கொடுக்கப்படும். பதிமுகாமை சேவைகள், 1-ம் மாடி றெட்டரி 34, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 471

நியாயமானவிலையில்இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். லஷ்மி பவனம், கேணியடி. கொக்குவில் மேற்கு, கொக்குவில் 460

Honda 125 N 85 ஸ்ரீ புதியதாக இறக்குமதி செய்யப்பட்டு தனி ஒருவர் பாவித்தது நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. அ. ரவீந்திரன் C/o V. N. திருநாவுக்கரசு, உயரப்புளம், ஆனைக்கோட்டை. 488

12000 B.T.U. U. S. A. Air Condition விற்பனைக்குண்டு. தொடர்பு: ராஜ்மோகன், சவுந்தரவாசா, டச்ரேட், உடுவில். தொலைபேசி: 23799 (437)

விபரங்கள் நேரில்
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்

## தேவை

யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற ஹோட்டலுக்கு மேலைத்தேச சாப்பாட்டுவகைகளும் கீழைத்தேய சாப்பாட்டு வகைகளும் சமைக்கத்தெரிந்த சமையல்காரர் தேவை விண்ணப்பிக்கவும்: 145 பிரதான வீதி யாழ்ப்பாணம். 475

## தவறிவிட்டது

தாவடி-மானிப்பாய் மினி பஸ் ஸில் ஒருஅல்பம் படங்களுடன் தவறவிடப்பட்டது. அதை வைத்திருப்பவர்கள் தயவுசெய்து கீழ்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். மா. அமிர்தலிங்கம், 23, B A தம்பி ஒழுங்கை, யாழ்ப்பாணம். 478

## குத்தகைக்கு

கிளிநொச்சிப்பகுதி ஐம்பது ஏக்கர் ஒரே காணி பல பங்காளிகள் பஸ்ரேட்டுக் கருகாமையில் நீர்ப்பாசன வசதி இரண்டு போகம் உபஉணவுப் பயிர்களுக்கு மாட்டுப்பண்ணைக்கு உகந்தது வசதியான வீடு பெரிய மாட்டுப்பட்டி நீண்ட காலக்குத்தகை வருடா வருடம் குத்தகை முற்பணம் அல்லது பெறுமதியுள்ள உத்தரவாதம். தொடர்பு கொள்ளவும் விளம்பர இல: 486 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம், 486

## பிறந்த தின வாழ்த்து



**றஜீத்குமார்**

மண்டைதீவைச் சேர்ந்த ராஜன் நந்தினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் றஜீத்குமார் தனது இரண்டாவது பிறந்த தினத்தை இன்று (25-6-84) கொண்டாடுகிருர். இவரை பெற்ரேர், தம்பி ரஞ்சித்குமார், உற்ருர், உறவினர்கள் ஆகியோர் இறைவன் அருளால் சகல நலன்களும் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர். 479

## WANTED

Wanted Sales Representatives for immediate employment. Apply with full particulars and experience Certificates, to reach us on or before 28th june, 1984. security Deposits required Salary and Commission negotiable Managing Director, General Marketing Organisation Limited, 32, Bankshall Street, Jaffna. 484

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

மதவடி தொண்டமனுற்றைச் சேர்ந்த கணபதி சடாச்சரம் என்பவரின் மரணசாதன மில்லாத ஆதன விடயத்தில்,

கணபதி சடாச்சரம் கைம்பெண் புவனேஸ்வரி மதவடி, தொண்டமனுறு.

மனுதார்

இல: 1195/ரீ

எதிராக

1. கணபதி சடாச்சரம் மகள் லதா
2. கணபதி சடாச்சரம் பிரபாகர்
3. கணபதி சடாச்சரம் பிரதீபன், எல்லோரும் மதவடி, தொண்டமனுறு.
4. கோபால் தனசேகரம் மம்பர்மலை, வல்வெட்டித்துறை.

எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட இறந்து போனவரின்மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டதென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984ம் ஆண்டு ஆனி மாதம் 18ம் திகதியன்று மு.ப 9-45 மணிக்கு அல்லது இத்திகதிக்கு முன்பு இந் நீதிமன்றின் முன்னர் தோற்றி இவ்வழக்கில் பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்ருன கட்டளையாக்கப்படக் கூடாதென்பதற்கு காரணம் ஏதும் இருப்பின் காட்டுமாறு தேள் வைப்படுத்தப்படுகின்ருர்.

1984ம் ஆண்டு ஆனி மாதம் 6ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

**றிச்சேட் ஜெயராசசிங்கம்**
பதிவாளர்

வரைவு

**வ.செல்லையா**
மனுதாரின் சட்டத்தரணி

19-6-1984

காரணம் காட்டும் திகதி 3-8-84க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

**றிச்சேட் ஜெயராசசிங்கம்**
பதிவாளர்
438

## WANTED

A part time Accounts Clerk Cum book - keeper - apply: Registrar, Patrician Institutes, 59, St. Patrick's Road, Jaffna. before 28-06-1984. 399

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

பருத்தித்துறைக் கல்லூரி வீதியைச் சேர்ந்த விக்ரர் இராசையா செல்வராசாவின் மரணசாதனமில்லாத சொத்து விடயத்தில்,

மரணமெய்தியவர் செல்வராசா கைம்பெண் இன்பமணி, கல்லூரி வீதி, பருத்தித்துறை.

மனுதார்

வழ. இல: 1204/Testy

எதிராக

1. செல்வராசா தபித்தா பிரபாகினி
2. செல்வராசா இமானுவேல் சுதாதரன்
3. செல்வராசா றயுஞ சுதர்மினி
4. செல்வராசா பிறிசில்வா பாமினி யாவரும் கல்லூரி வீதி, பருத்தித்துறை.
5. ஆழ்வாப்பிள்ளை இராசசிங்கம் 330 நாவலர் வீதி நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்.

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனமில்லாத வழக்கு மேலே குறிப்பிடப்பட்ட இறந்து போன விக்ரர் இராசையா செல்வராசாவின் ஆதனங்கள் மற்றும் சொத்துக்கள் ஆகியவற்றை நிர்வகிப்பதற்காகமேற் சொல்லிய நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள எவரேனும் 1984ம் ஆண்டு ஆடி மாதம் 27ம் திகதி முற்பகல் 9-45 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்ருன தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் பணிக்கப்படுகின்றீர்.

1984ம் ஆண்டு ஆனி மாதம் 15ம் திகதி.

**றிச்சேட் ஜெயராசசிங்கம்**
பதிவாளர்

வரைவு

**ஏ.என்.ராமச்சந்திரன்**
மனுதாரின் சட்டத்தரணி

394

**வியாபாரம் பெருக**

**விளம்பரம் செய்க**

# யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி

## நீங்கள் வெளிநாடு செல்ல வேண்டுமா?

உங்கள் பிரயாணச் சீட்டுக்களை இன்றே யாழ்நகரிலேயே பதிவு செய்து கொள்ள நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

**குரேஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

பிரான்ஸ், இத்தாலி செல்வதற்கான இருவழி பயணச்சீட்டும், விசா மற்றும் சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும்.

**Cross Travel Services (Pte) Ltd.**

STAGE II, MODEL MARKET
No, 5, 1st FLOOR
BUS STAND CENTRE ROAD,
JAFFNA,
Phone No: 22040, 22065,

# தேவை

(1) தென்னந்தும்பு (2) பனந்தும்பு
(3) ஈக்கில் தடி விளக்குமாறு
(4) உழுந்து (5) பயறு
(6) சிறுவருக்காக தைக்கப்பட்ட ஆடைகள்

ஏற்றுமதிக்காக தொகையாக கிரமமாக வழங்கக் கூடியவர்கள் விலைக்கூறுகளை அனுப்பவும், அல்லது நேரில் தொடர்பு கொள்ளவும்.

மனேஜர் (ஏற்றுமதி)

**விஜயலங்கா எக்ஸ்போர்ட்ஸ் அன் கொன்ருக்ஸ் கம்பனி**

பருத்தித்துறை வீதி, கோப்பாய் வடக்கு.
(உதவி அரசாங்க அதிபர் பணிமனை முன்பு)
கோப்பாய், 402

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெபனுன் அரசின் புதிய சமரச திட்டத்துக்கு வரவேற்பு!

## பெய்ரூட்டின் மேற்கு-கிழக்கு போர்நிறுத்தக் கோடு நீக்கம்!

**பெய்ரூட், ஜூன் 24 லெபனுனின் தேசிய ஒற்றுமை அரசாங்கம் தீவிர கிறிஸ்தவ, முஸ்லிம் பிரிவுகளுக்கு இடையே ஒற்றுமையை ஏற்படுத்த புதிய சமரசத் திட்டமொன்றை வெளியிட்டுள்ளது. இத்திட்டத்தைலெபனுன்பிரதமர் திரு.ரஷித்கராமி நீண்ட நேரம் தமது அமைச்சரவை சகாக்களுடன் ஆராய்ந்தபின்னர் நேற்றுப் பகிரங்கப்படுத்தினுர்.**

லெபனுனில் தீவிரவாத முஸ்லிம், கிறிஸ்தவப் பிரிவுகளிடையே இத்திட்டம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதென்றும் தெரியவருகின்றது.

புதிய திட்டம் கடந்த ஒன்பதுவருடங்களாக லெபனுனில் கிறிஸ்தவ, முஸ்லிம் தீவிரவாதிகளிடையே இருந்துவந்த பகைமையை அகற்றுவதாக இருக்குமென்று கூறப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் இராணுவ அமைப்பு மறுசிரமைக்கப்பட்டுள்ளது. லெபனுன் இராணுவத்தில் ஒன்ருக இருந்துவந்த கிறிஸ்தவ-முஸ்லிம் வீரர்கள் கடந்தஆண்டு பெப்ரவரியில் பிளவுபட்டனர். இந்நிலைமைக்கு இவர்களின் மதம் சார்ந்த தீவிரவாதிகளே காரணமாகும்.

புதிய திட்டம் இப்பிரிவினையை நீக்குவதாக அமைந்துள்ளது. இராணுவத்தின் தலைமை கிறிஸ்தவர் ஒருவருக்குக் கொடுக்கப்படவுள்ளது.

இவருக்கு உதவியாக ஆறுபேர் கொண்ட உயர் அதிகாரிகள் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் பெரும்பாலானவர்கள் முஸ்லிம்களாவர்.

இத்துடன் இதுவரை காலமும் பெய்ரூட்டில் முஸ்லிம்கள் வாழும் மேற்குப்பகுதியையும், கிறிஸ்தவர்கள் வாழும் கிழக்குப் பகுதியையும் பிரித்துவைத்திருந்த 'கிறீன்லைன்' என்ற போர் நிறுத்தக் கோடும் அகற்றப்படவுள்ளது.

மூடப்பட்டிருந்த பெய்ரூட் சர்வதேச விமான நிலையம், துறைமுகம் ஆகியன மீண்டும் திறக்கப்படவிருக்கின்றன.

சிரிய உப ஜனுதிபதி, லெபனுன் அரசியல் வட்டாரங்களில் கடந்த வாரம் ஏற்படுத்திய உடன்பாடே இப்புதிய சமரசத் திட்டத்தை உருவாக்க வழிவகுத்துள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. (கி)

## ஆஸ்த்திரிய ராஜதந்திரி கொலை!

பெய்ரூட், ஜூன் 24

ஆஸ்த்திரியாவின் லெபனுனுக்கான ராஜதந்திரத் தொடர்பு அதிகாரி நேற்று பெய்ரூட்டில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரை வீட்டில் மோட்டார் கார் நிறுத்திவைக்கும் பகுதியில்வைத்தே இனம்தெரியாதவர்கள் சுட்டுவீழ்த்திய பின்னர் தலைமறைவாகினர்.

இதே வேளை லெபனுனில் லிபிய ராஜதந்திரி ஒருவரும் நேற்றுக் கடத்திச்செல்லப்பட்டுள்ளார். இவர் ஹோட்டல் ஒன்றில் இருந்தபோது கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (கி)

## வடபகுதி அகதிகள் பிரச்னை:
### தொண்டமானுடன் ஆலோசனை

(சித்தன்கேணி)

குடிபெயர்ந்தோர் நலன் அபிவிருத்திப் பேரவையினர் நாளை செவ்வாய்க்கிழமை கொழும்பில் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமானையும் இ. தொ. கா. பொதுச்செயலாளர் திரு.எஸ். செல்லச்சாமியையும் சந்திக்கவுள்ளனர்.

இச்சந்திப்பின்போது வடபகுதி அகதிமுகாம்களிலுள்ள அகதிகளின் பல்வேறு பிரச்னைகள் தொடர்பான விடயங்கள் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவரப் படவுள்ளதாக குடிபெயர்ந்தோர் நலன் அபிவிருத்திப் பேரவைச் செயலாளர் மாத்தளை இராசலிங்கம் தெரிவித்தார்.

## அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட்டது

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை நேற்றுப் பாராளுமன்றத்தில் 115 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இப்பிரேரணைக்கு ஆதரவாக 125 பேரும், எதிராகப் பத்துப் பேரும் வாக்களித்தனர். (இ-வெ)

## இடமாற்றத்தை ரத்துச்செய்ய கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு வீடமைப்பு உத்தியோகத்தர் திரு, கே. வி. காசிலிங்கத்தின் இடமாற்றத்தை ரத்துசெய்து தருமாறு வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பலபொது நல இயக்கங்கள் தேசிய வீடமைப்பு அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

## 'பொற்கோயில்' முற்றுகை:
## கைதான சீக்கிய தீவிரவாதிகளில் 335 பேர் விடுதலை!
### இந்திராவின் 'பொற்கோயில்' விஜயத்துக்குப் பாராட்டு!

சண்டிகார், ஜூன் 24

அமிர்தசரஸ் 'பொற்கோயில்' வளாகத்தை இந்திய இராணுவம் முற்றுகையிட்டபோது கைதுசெய்யப்பட்ட சீக்கிய தீவிரவாதிகளில் 335 பேர் நேற்று விடுதலைசெய்யப்பட்டனர்.

இவர்களுடன் கைதான மேலும் பலர் மீது விசாரணைகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன.

இதுஇவ்வாறிருக்க இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் 'பொற்கோயில்' விஜயத்தை சீக்கிய பிரமுகர்கள் பலர் பாராட்டியுள்ளனர். இவ்விஜயம் சீக்கிய மக்கள் மத்தியில் இந்திராவுக்கும் அவரது அரசாங்கத்துக்கும் ஏற்பட்டுள்ள பகையுணர்வை அகற்றிக்கொள்ள வழிவகுக்கும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

திருமதி காந்தி பஞ்சாப் 'பொற்கோயில்' வளாகத்தினுள் சென்றபோது அக்கோயிலின் பிரதம குரு அவரை வரவேற்ருர். சீக்கிய மத கீதங்களும் அங்கு இசைக்கப்பட்டன.

பொற்கோயிலின் பிரதான பகுதியான 'ஹர்மந்தர் சாஹிப்' என்ற வழிபாட்டுக் கட்டிடத்தையும் திருமதி காந்தி தரிசித்தார். பொற்கோயிலின் அதி பிரதானமான இக்கட்டிடப்பகுதியை சேதமாக்காதவாறே இக் கோயிலினுள் நுழைந்த இந்திய இராணுவத்தினர் தமது தாக்குதலை மேற்கொண்டனர்.

'ஹர்மந்தர் சாஹிப்' கட்டிடம் சிறிதளவேனும் சேதமாக்கப்படலாகாது என்பதில் இந்திய இராணுவம் விழிப்பாக இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

'பொற்கோயில்' விஜயத்தின் பின்னர் பஞ்சாப் இராணுவ வைத்தியசாலைக்குச் சென்று அங்கு பொற்கோயில் தாக்குதலின்போது காயமடைந்த இராணுவ வீரர்களையும் திருமதி காந்தி பார்வையிட்டார்.

இது இவ்வாறிருக்க, திருமதி இந்திராகாந்தி பொற்கோயில் தாக்குதல், இந்தியாவில் தீவிரவாத சீக்கியர்களின் நடவடிக்கைகளை விபரித்து உலகத் தலைவர்களுக்கு கடிதங்களை எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

குரேஸ் ட்ரவல் சேவிசஸ் பிறைவேற் லிமிட்டெட்
(CROSS TRAVEL SERVICES (Pte) LTD.)
ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் புதிய முயற்சி:-

குரேஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை
(Cross International Telecommunication Services)

FOR ALL INTERNATIONAL AND LOCAL DIRECT DIALLING TELEPHONE CALLS.

INTERNATIONAL TELEX SERVICES :- NO DELAY AT ALL, CHEAP RATES, CONTACT US RIGHT NOW.

குரேஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை :
(i) சர்வதேச, உள்ளூர் நேரடி தொலைத்தொடர்பு சேவை.
(ii) சர்வதேச ரெலெக்ஸ் சேவை.

உலகின் எப்பாகத்திற்கும குறைந்த கட்டணத்தில் நேரடிச் சர்வதேச தொலைத்தொடர்பு சேவையும், ஒரு நொடிப்பொழுதில் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

CTS

Cross International Telecommunication Services
STAGE II, FIRST FLOOR, BUS STAND CENTRE ROAD, MODEL MARKET, JAFFNA.
Phone No: 22040, 22065. Telex No: 22207 (C. T. S.)

ஹோம் பிறுன்ஸ் லிமிட்.
பூகொடை ஆலைத்துணிகள்

யாழ். புடவை வியாபாரிகட்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்

எம்மிடம் பணம் நிலையாக வைப்புச் செய்த வியாபாரிகட்கு அவர்கட்குரிய
30% வருடவட்டி வழங்குவதுடன்
புடவை வகைகளும் கடன் வசதியுடன் வியாபாரத்திற்கு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிருேம்

NATIONAL DELUXE
மின் விசிறிகள்
கடன் வசதியுடன் உண்டு

விபரங்கட்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்

82, கன்னுதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24310

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நான் மகிழ்ச்சியோடு இருக்கிறேன். ஏனெனில், நான் யாரிடமும் எதுவும் எதிர்பார்ப்பதில்லை.

— ஐன்ஸ்டைன்.

## நமது நோக்கு

# யாழ். விவசாயபீடம்: திட்டத்துக்கு நடந்ததென்ன?

இரண்டாவது உலக மகா யுத்தம் பிரிட்டனைக் கலக்கிய கட்டத்தில்; சமாதானம் ஏற்பட்டதும் நடந்தேறவேண்டிய அவசிய சிவில் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டன.

பிரிட்டிஷ் மக்களின் அரசியல் முதிர்ச்சிக்கு இன்னொரு உதாரணம்; யுத்தம் முற்ருய் முடிவடையமுன் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றிக்குக் காரணமாயிருந்த பிரதமர் சேர்ச்சிலை வீட்டுக்கனுப்பியது.

யுத்தம் வெற்றியில் முடியவேண்டுமென நூற்றுக்கு நூறு ஒத்துழைப்பை நல்கிய பிரிட்டிஷ் மக்கள் அதே நேரத்தில் நாட்டைப் புனரமைக்கும் நடவடிக்கைகளுக்கு யுத்த முடிவைக் காத்திருக்கவில்லை. புனருத்தாரணத்துக்கு எந்தக் கட்சியின் ஆட்சி தேவையென்பதையும் முடிவெடுக்கத் தாமதிக்கவில்லை.

இன்று இந்தக் 'குட்டித்' தேசத்தில் நடைபெறுவது யுத்தமா? வெளிநாடு எதுவும் எம்மைச் சண்டைக்கு இழுக்கவில்லை. எமக்கும் அந்த எண்ணமில்லை. எங்கள் 'போட்டி'களைப் பிரபலப்படுத்த சிலவேளைகளில் கொடுக்கிழுத்துக்கட்டுகிறோம். வாலைச் சுருட்டவேண்டிய காலம் வராமற் போவதில்லை.

அது என்ன வானாலும் வடக்கில் 'பயங்கரவாதம்' தெற்கில் 'தீவிரவாதம்' ஆட்சிக்கு ஒரு (இரு) சவால் எனலாம். அதற்கென்ன? ஜனநாயக நாடு இலங்கை என்பதால் இதன் விளைவு மக்களைப் பொறுத்ததே; ராணுவத்தையல்ல.

பல்கலைக்கழகங்களில் கலகம் உற்பத்தியாவதற்குப் பல காரணங்கள் உள; அவற்றைக் கண்டுபிடித்து உரிய நடவடிக்கைகள் எடுப்பதில் அரசாங்கம் அகங்காரத்தைக் கைவிடவேண்டும். உள்வீட்டுப் போட்டி ஏதும் இருந்தால் அதனை வீட்டுக்குள்ளே பூட்டிவைப்பது மிக அவசியம்.

அரசியல் நிலைமை குழம்பியிருந்தபோதும் நாட்டின் ஆட்சி தளம்பாது நடக்கவேண்டும். பல்கலைக்கழகங்கள் திறக்கப்படும்; பகிஷ்காரம் முடிவடையும்; இந்த நம்பிக்கையில் நெடுங்காலம் தாமதப்பட்ட திட்டங்கள் தீவிரமாகத் தொழிற்படவேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மத்தளம்போல இரண்டு பக்கத்திலும் அடிபடுகின்றது; வடபகுதி பயங்கரவாதமென்ற பாம்பைத் தேடி கலைக்கோயிலின் புனிதம் மாசுபடும் வகையில் கருடன் உள்ளிடுகின்றது. பல்கலைக்கழக விருத்திக்கு அவசரமான விடயங்கள் மறக்கப்படுகின்றன. பல்கலைக்கழக மான்யக்குழு அவற்றை மறைக்கின்றது என்று சொல்வதோ கொள்வதோ நியாயமாகாது.

யாழ். பல்கலைக்கழகத்துக்கு அவசியம் தேவையான விவசாயபீடம் பற்றிய அறிக்கை ஒரு பூரணப்பட்ட இலக்கியம்போல் தெரிகிறது; இதனைப் படித்தவர்கள் சுமார் ஐந்து வருடங்களுக்குப்பின் பீடத்தை நேரில் பார்க்க ஆசைப்படுவது இயல்பு.

என்ன நடந்தது என்ன நடக்கிறது என்ற வினுக்களுக்குப் பதில் என்ன?

கடந்த வருடம் பேராதனையில் நடந்த கலவர காலத்தில், யாழ் விவசாய பீடம் இதோ வந்துவிட்டதென்ற பேச்சுக் காதில் அடிபட்டது வாசகர்களுக்கு நினைவிருக்கும்.

அந்தப் பேச்சுக்கு என்னுச்சு? என்று கேட்கவே நாம் மறந்துவிடுகிறோம்.

ஐந்து வருடத்துக்கு முன் ஆரம்பமான முயற்சி இன்றும் அறிக்கையுடன் நின்றுவிட்டது பெரும் ஏமாற்றம்.

கிளிநொச்சியில் கட்டப்படவேண்டிய பீடத்தின் பூரண அமைப்பு முடிவதற்கு சுமார் நான்கு வருடங்கள் தேவைப்படுமெனச் சொல்லப்பட்டிருக்கிறது.

அதனைக் காத்திராமல் தற்காலிகமாக திருநெல்வேலியில் பட்டப்படிப்பின் முதல் வருடத்தை 1983ல் தொடங்கவேண்டுமென்பது அறிக்கையின் முக்கிய சிபாரிசு.

கிளிநொச்சியே பீடத்துக்கு தரமான இடமென்பது முடிவாயிற்று ஆனல் நீண்டகால கட்டிட வேலை தவிர்க்கமுடியாததானதால் திருநெல்வேலியில் பீடத்தை உடனடியாகத் தொடங்குவதற்கு சுமார் 12 லட்சம் தேவை.

தற்காலிகமாகத் தொடங்கிவிட்டு இரண்டாவது வருடப் படிப்பு கிளிநொச்சிக்கு மாற்றப்படும் சாத்தியமில்லாவிட்டால் மாணவர் நட்டாற்றிலென்பது தெளிவு.

பல்கலைக் கழக மான்யக் குழு இன்று இதனை முக்கிய தேவையாகக் கருதுமா? ஏன் கருதக்கூடாதென்றுதான் நாம் கேட்கிறோம். பாகுபாடு இருக்குமென்பதை நாம்ஒத்துக்கொள்ளவில்லை.

யாழ்ப்பாணத்தின் சிறப்புரிமைகளைக்கொண்ட பீடமாய் அமையவேண்டுமென்ற ஆசிவழங்கிய மான்யக்குழு இதனைத் தட்டிக்கழிக்க முயன்ருல் விடயம் அவ்வளவில் முடிந்துவிடவில்லை.

யாழ்ப்பாணத்தின் நியாயமான தேவைகளுக்கு இன்றும் வெளிநாடுகளின் உதவி கிட்டும். யாழ். பெரிய ஆஸ்பத்திரிக்கு பிரிட்டிஷ் ஆட்கி உதவி வழங்குகிறது.

அரசியல் பேதங்களையும் நாட்டின் ஒருபகுதி முன்னேறும் முயற்சிகளையும் கலந்து நாடனைத்திலும் ஒரு தயக்க நிலைமையை நாம் தினசரி வளர்த்துவருகின்றோம்.

திருநெல்வேலியில் விவசாயபீடம் தற்காலிகமாகவும், கிளிநொச்சியில் நிரந்தரபீடத்தின் அமைப்பு வேலை திட்டமிட்டபடி ஆரம்பமாகவும் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு உதவி [illegible]

# கொழும்பில் முஸ்லிம்களுக்கு 'முசாபிக்கானு' அவசியம்!

பத்து லட்சம் முஸ்லிம்கள் வாழும் இந்நாட்டின் தலைநகரான கொழும்பில் முஸ்லிம்களுக்கென்று ஒரு தங்குமிடம் இல்லாதிருப்பது பெரும் குறையாக இருக்கிறது.

ஹஜ் யாத்திரிகர்களுக்கும், வேலை வாய்ப்பு பெற வெளிநாடு செல்வோருக்கும், வியாபாரம் சம்பந்தமாக முஸ்லிம்கள் கொழும்புக்கு பலவகை தேவைகளுக்காக வருவோருக்கும் தங்கிப் போவதற்கு பாதுகாப்பான இடம் இல்லாததால் அநேக பிரயாணிகள் கள்வர்கள், கொள்ளையர்கள் கையில் சிக்கி உடுதுணிகளையும், பொருட்களையும், தங்கள் தஸ்தாவேஜுகளையும் இழந்து அல்லோலப் படுகின்றனர். இதைத் தவிர்ப்பதற்காக ஓர் முசாபிக்கானு வேண்டப்படுகின்றது.

## மக்கள் கருத்து

அநேகமாக மட்டு நகர், யாழ்ப்பாணம், இன்னும்பல ஊர்களிலிருந்து கொழும்பு வரும் முஸ்லிம்கள் தங்கள் கலை, கலாசார திறமைய

### எம். ஈ. ஷாஹுல்

(வடபிராந்திய போ. ச. ஆலோசனை சபை உறுப்பினர்)

வை. எம். சி. ஏ. போன்ற இடங்கள் கிறிஸ்தவ ம்க்களுக்கும், இந்துக்களுக்கும் உண்டு. பம்பாய், மதுரை, சென்னை முதலிய இடங்களில் கூட முறையே பம்பாய், அப்துல் ஹக்கீம் முசாபிக்கானு இருப்பதுபோல் நம் நாட்டிலும் இருக்குமானல் முஸ்லிம்களுடைய மார்க்க கட்டளைகளைப் புரிவதற்கும் குறைந்த கட்டணத்தில் தங்கிச் செல்வதற்கும் பெரிய நன்மை பெறலாம் என்பதில் ஐயமில்லை.

இதற்காக இலங்கையில் ஒவ்வொரு பகுதியிலும் குறைந்த பட்சம் இருவரையாவது செயற்குழுவில் அங்கத்தவராக தெரிந்தெடுத்து துரித நடவடிக்கை எடுக்கப்படல் இன்றியமையாததாகும்.

உதவியாக இருக்கும். இதிலிருந்து பெறும் வருமானத்தைக் கொண்டு அந்த நிலையத்தின் பராபரிப்புக்கும் கணக்காளர், முதலியவர்களுக்கும் போதுமான சம்பளம் கொடுத்தும், இலாபமும் பெறலாம்.

வது அரசாங்கத்தை மட்டும் பொறுத்ததல்ல. இது 1985ல் ஆவது தொடங்கவேண்டும்.

ஜனதிபதி ஜெயவர்த்தன பேசும் பாணியில் சொல்லுவதானல் எந்தப் பிசாசுடனும் உறவாடி இந்த உதவியைப் [illegible] வேண்டும்.

## இந்த வீதியின் அவலம்

சங்க காலத்தில் மக்கள் மாட்டுவண்டிகளையே போக்குவரத்துக்கு பாவித்து வந்தனர். அப்போது செப்பனிடப்பட்ட வீதிகள் இருக்கவில்லை. குன்றும் குழியுமான பாதைகளில் மாட்டு வண்டில்களின் பயணம் பற்றி நம்முன்னேர் சொல்லக் கேட்டிருக்கிறோம்,

இந்தப் பயணத்தை நாம் அனுபவிக்க வில்லையே என்று எண்ணியிருந்த தீவுப்பகுதி மக்களில் ஒரு சாராருக்கு அதனை இக்காலத்திலும் அனுபவிக்கும் பாக்கியம் கிடைத்திருக்கிறது.

புளியங்கூடல் சந்தியிலிருந்து சுருவில் ஊடாக ஊர்காவற்றுறை செல்லும் பிரதான வீதியால் ஏதேனும் ஒரு வாகனத்தில் பயணம் செய்தால், சங்க காலத்துப் பயணத்தை நாம் நினைவு கூரலாம். அந்தளவிற்கு அந்த வீதி குன்றும்குழியுமாக காட்சி தருகிறது.

வேலணை பெருந்தெருக்கள் திணைக்களத்தின் பராமரிப்பிலுள்ள இந்த வீதி பல வருடங்களாக ஏனே திருத்தப்படாமலே இருந்து வருவது இப்பகுதி மக்களுக்கு பெரும் சிரமத்தை ஏற்படுத்துகிறது. சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

வே. குகனேசன்
புளியங்கூடல்
ஊர்காவற்றுறை

### 15 குதிரைச்சக்திக்கு மேற்படாத

# 2 வெளி இணைப்பு இயந்திரங்களை கடற்றெழிலாளர் பாவிக்கலாம்

## யாழ். செயலக உயர் மாநாட்டில் தீர்மானம்

(ஏ. வி. மாணிக்கம்)

வடபகுதியில் கடற்றெழிலாளர் தொழிலில் ஈடுபடும் வேளையில் ஒவ்வொன்றும் பதினைந்து குதிரைச்சக்திக்கு மேற்படாத இருவெளி இணைப்பு இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்கு அல்லது வைத்திருப்பதற்கு எதுவித அட்சேபனையும் இல்லை என்றும் ஆனல் பயன்படுத்தப்படும் அல்லது வைத்திருக்கப்படும் வெளி இணைப்பு இயந்திரங்களில் மொத்தக் குதிரைச்சக்தி எச்சந்தர்ப்பத்திலும் 25 குதிரைச் சக்திக்கு மேற்படக் கூடாதென்றும் யாழ். செயலகத்தில் நடைபெற்ற உயரதிகாரிகள் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் கடந்த ஏப்ரல் 18-ம் திகதி முதல் கடல் பிராந்திய பாதுகாப்பு வலயம் ஏற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து கடற்றெழிலாளர்கள் எதிர்நோக்கும் சில முக்கிய பிரச்னைகள் குறித்து ஆராய்வதற்காக இம்மகாநாடு நேற்றுக்காலை கூட்டப்பட்டது.

யாழ், அரசாங்க அதிபரும் யாழ். மாவட்ட செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி பிரிகேடியர் ஜி. டி. ஜி. என். செனிவிரத்ன, யாழ். பொலிஸ் அதிபர் என். ரி. ஈ. ஆனந்தராசா, கேர்ணல் ஆரியப்பெருமா, கடற்படை அதிகாரி காப்டன் ஜி. டி. ஏ. வீரசேகர உட்பட பல அதிகாரிகள் சமுகமளித்திருந்தனர்.

கடற்றெழிலாளர்களின் நலன்களைக் கவனிப்பதற்கு டாக்டர் ஜே. பி. சி. பிலிப், வடமாகாண மீன்பிடித்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாஜத்தலைவர் திரு. கே. எஸ். பொன்னுத்துரை, யாழ், மாவட்ட கடற்றெழில் விரிவாக்க உத்தியோகத்தர் திரு. கே. ரி. சிவஞானம் ஆகியோரும் இம்மகாநாட்டில் சமுகமளித்திருந்தனர்.

கடற்பிராந்திய பாதுகாப்பு வலயம் சம்பந்தமாக அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் 9-ம் பிரிவின்படி யாழ். நிர்வாக மாவட்டத்தில் ஆள் எவரும் 15 குதிரை சக்திக்கு மேற்பட்ட வெளி இணைப்பு இயந்திரம் எதனையும் உடைமையில் வைத்திருத்தல் அல்லது பயன்படுத்தல் ஆகாது.

இருந்தும் கடற்றெழிலாளர்கள் தொழிலில் ஈடுபடும் வேளையில் ஒவ்வொன்றும் 15 குதிரை சக்திக்கு மேற்படாத 2 வெளி இணைப்பு இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்கு அல்லது வைத்திருப்பதற்கு எதுவித ஆட்சேபனையும் இல்லை என்றும் ஆனல் பயன் பயன்படுத்தப்படும் அல்லது வைத்திருக்கப்படும் வெளி இணைப்பு இயந்திரங்களில் மொத்தக் குதிரைச் சக்தி எச்சந்தர்ப்பத்திலும் 25-க்கு மேற்படக்கூடாதென்றும் ஏகமனதாக இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கடற்றெழிலாளரின் நலன் கருதி பத்திரிகைகளில் இத்தீர்மானம் பற்றிய செய்தி பிரசுரிக்கப்படல் வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

### வள்ளங்கள் பதிவுசெய்ய வேண்டும்

மேலும் மீன்பிடி வள்ளங்கள் யாவும் பதிவுசெய்யப்பட்டு அவற்றுக்காக எடுக்கப்பட்ட பதிவு இலக்கங்கள் தெளிவாக வள்ளங்களில் பொறிக்கப்பட வேண்டும் என்று ஏற்கனவே விடுக்கப்பட்ட வேண்டுகோளை மீண்டும் வலியுறுத்தி அமுல் செய்யவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. (மா)

## நயினை உற்சவம்

(வண்ணார்பண்ணை)

இலங்கையில் பிரசித்தி பெற்ற சைவ ஆலயங்களில் ஒன்ருன நயினைதீவு ஸ்ரீநாகபூஷணி அம்பாள் வருடாந்த உற்சவம் இம்மாதம் 28-ம் திகதி கொடியேற்றத்திருவிழாவுடன் ஆரம்பமாகவுள்ளது.

இவ்வுற்சவத்தை முன்னிட்டு போக்குவரத்து, சுகாதாரம், பாதுகாப்பு ஆகியவற்றைக் கவனிப்பதற்கான குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

யாத்திரீகர்களுக்குத் தேவையான வசதிகளைக் கவனிக்கும் பொருட்டு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கடந்த மாதம் நடத்திய இவ்வுற்சவ கால நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைக்கூட்ட முடிவின் பிரகாரம் மூன்று அரச அதிகாரிகள் இணைப்பு அதிகாரிகளாகச் செயற்பட்டு வருகின்றனர். ஆலய நிர்வாகிகளுடன் இணைந்து இவர்கள் நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் வீடியோ திரைப்படக் கொட்டகைகள்;

## மாநகர ஆணையாளர் அனுமதி

(மட்டக்களப்பு)

''வீடியோ'' திரைப்பட கொட்டகைகளை, மட்டக் களப்பு மாநகர சபையின் அனுமதியுடன் அமைக்க வேண்டும் தற்காலிக அனுமதி பத்திரம் ஆறு மாதத்திற்கு ஒரு தடவை புதுபிக்க வேண்டும்.

மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் திரு. பெனடிற் தார் இசிலஸ் 'வீடியோ' திரைப்படம் காட்டுவோர்களுடன் நடந்த கூட்டத்தில் மேற் கண்ட முடிவு எடுக்கப்பட்டது,

'வீடியோ' திரைப்படம் காட்டுவதற்கு உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் சுற்று நிருபம் மூலம் அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து இக் கூட்டம் நடைபெற்றது.

'வீடியோ' திரைப்பட கொட்டகைகள் பொதுமக்கள் பாவனைக்கு உகந்ததாகவும், சகல சுகாதார வசதிகள் நுழை வாயில் வசதிகள், மின்விசிறி, குடிநீர், காற்றோட்ட வசதிகளுடன், ஆண், பெண் தனித் தனி மலசலகூட வசதிகள் செய்யப்பட வேண்டும் என்றும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது

இக்கூட்டத்தில் கீழ்க்காணும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

கொட்டகைகளுக்கான மின்சார இணைப்பு தனியாக விண்ணப்பம் செய்து பெற வேண்டும்.

கொட்டகை அமைப்பவர்கள் அனுமதி பெறுபவர்களிடமிருந்து பதிவுக் கட்டணம் 100 ரூபாய் அறவிடுவதோடு சபைக்கு வருமானமாக 1200 ரூபா வருடாந்தம் செலுத்த வேண்டும்.

கொட்டகைகளில் பிரவேச சீட்டு பார்வையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இச் சீட்டுக்களில் சபையின் ரபர் சீல் பதிவு செய்யப்பட வேண்டும்.

இச்சபைக்கு பொது களியாட்ட வரியாக 25 சதவீதமும் சீட்டுக்களுக்குரிய 25 சதவீதம் களியாட்ட வரியாக செலுத்த வேண்டும். விற்பனையாகும் சீட்டுக்களின் விபரம் சபைக்குரிய களியாட்ட வரி விபரம் என்பன நாளாந்தம் சபைக்கு சமர்பிக்க வேண்டும். இதன் பிரகாரம் உரிமையாளர்கள் 500 ரூபாய் முற்பணம் செலுத்த வேண்டும்.

ஆபாசப் படங்கள், தடை செய்யப்பட்ட படங்கள் திரையிடப்படுவது கண்டுபிடிக்கப்பட்டால் அதனுல் ஏற்படும் விளைவுகளை உரிமையாளர்கள் ஏற்கவேண்டும்.

சபையின்ஊழியர்கள் கொட்டகைகள் மீது மேற்கொள்ளும் திடீர் முற்றுகையில் டிக்கட் மோசடி, சுகாதார சீர்கேடு போன்றன காணப்பட்டால் அனுமதி ரத்து செய்யப்படும். (க)

# கரையோர கிராமங்களில் புதுவித 'காய்ச்சல்'

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள கரையோரக் கிராமங்களான மயிலிட்டி ஊறணி ஆகிய கிராமங்களில் புதுவிதமான காய்ச்சல் நோய் பரவி வருவதால் மக்கள் மத்தியில் அச்சம் நிலவி வருகிறது.

கடந்த சில வாரங்களாக மேற்படி கிராமத்தைச்சேர்ந்த பலர் காய்ச்சலினுல் பீடிக்கப்பட்டு கடுமையான நிலைக்குள்ளாகியுள்ள பலர் யாழ். பெரியாஸ்பத்திரியிலும், ஏனைய பலர் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை, கூட்டுறவு வைத்தியசாலை ஆகியவற்றிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றுர்கள்.

இந்த புதுவிதமான காய்ச்சல் சிறுவர்கள் முதியோர்கள் ஆகியோரை பீடிக்கவில்லை என்றும் இடைப்பட்ட வயதுடைய இளைஞர்யுவதிகளையே அதிகம் பீடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது நெருப்புக் காய்ச்சல்

(8ம் பக்கம் பார்க்க)

### மாநகரசபை, நகரசபை பகுதிகளில்

# 'வீடியோ' திரைப்படம் காட்ட சட்டபூர்வமாக அனுமதி!

(பட்டக்களப்பு)

'வீடியோ' திரைப்படம் காட்டுபவர்கள் மாநகரசபை நகரசபைகளில் பதிவு செய்து சட்டபூர்வமான முறையில் காட்டுவதற்கான அனுமதிகளை சபைகளின் சட்டதிட்டங்களுக்கமைய வழங்கலாமென்றுசபைகளின் தலைவர்கள் கேட்கப்பட்டுள்ளார்கள்.

இதுதொடர்பாக உள்ளூர் ஆட்சி அமைச்சின் சிரேஷ்ட செயலாளர் திரு. கே. எம். அபேசிங்கா சகல மாநகர சபை நகரசபைகளுக்கும் அறிவித்துள்ளார்.

இவ்விவகாரம்குறித்து அவர் சட்ட மாஅதிபரிடம் ஆலோசனை கேட்டிருந்தார்.

சட்ட மாஅதிபர் 'என்டாய்மென்ற் வரி' யின்கீழ் வீடியோ திரைப்படங்களைக் காட்டலாமென்று தெரிவித்ததையடுத்தே இதற்கான அனுமதி வழங்கும் பொறுப்பு மாநகர நகர சபைகளுக்கு வழங்கப்பட்டது. (க)

# குமாரசாமியின் சேவைக்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்)

''எமது கல்லூரிப் பெறு பேறுகளைப் பொறுத்தவரையிலும், விளையாட்டுப் போட்டிகளிலும், ஏனைய கல்லூரி நடவடிக்கைகளிலும்முன்னணியில் விளங்குவதற்கு அதிபர் பி. எஸ். குமாரசாமியின் அயராத உழைப்பும், தன்னலமற்ற சேவையும் பிரதான காரணமாகும்.''

யாழ். இந்துக் கல்லூரி அதிபராக எட்டுவருடகாலம் சேவையாற்றியபின்னர் ஓய்வு பெற்ற திரு. பி. எஸ். குமாரசாமியின் பிரிவுபகார விழாவில் முன்னுள் யாழ். மாநகர சபை முதல்வர் திரு. சி. நாகராசா பேசுகையில் மேற்கண்டவாறு கூறினுர்.

யாழ்ப்பாணம் ''ஜொலி ஸ்ரார்ஸ்'' விளையாட்டுக் கழகத்தினர் ஏற்பாடு செய்து. கொக்குவில் இந்துக் கல்லூரி உப அதிபர் திரு. ஆர். மகேந்திரன் தலைமையில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடந்த பிரிவுபசார விழாவில் திரு. சி. நாகராசா மேலும் கூறியதாவது;

''திரு. குமாரசாமி மாணவப் பராயத்திலும், கல்விப் புலமைமிக்கவராகவும், விளையாட்டுத்துறையில் சிறந்த வீரராகவும் திகழ்ந்தார். கண்ணியத்துடனும், நேர்மையுடனும் கடமையாற்றிய காரணத்தால் மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள்

(8ம் பக்கம் பார்க்க)

## யாருடையது?

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டம் திரு. சகாயப்பிரான்சிஸ் என்பவருடைய நிலையான வைப்புச் சான்றிதழை திரு எஸ். கந்தையாவும், நான்கு திறப்புக்கள் கொண்ட கோர்வையை ஜனுப் எஸ். நஜீம் என்பவரும், மடுக்கோவில் பெரியபண்டிவிரிச்சானைச் சேர்ந்த செல்வி ஞானப்பிரகாசம் மேரி இமெல்டாவின் அடையாள அட்டையைச் செல்வி என். சாரதாதேவி என்பவரும், காரைநகரைச் சேர்ந்த திரு. வேலுப்பிள்ளை சிங்காரம் என்பவரின் அடையாள அட்டையை திரு. கே. கருணுகரன் என்பவரும் கண்டு எடுத்து 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் தகுந்த அத்தாட்சி காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

மூத்தோர் வார்த்தை அமிர்தம்!

மூத்தோரின் வார்த்தைமட்டுமன்றி செயலும் மேன்மைமிக்கதே.
வாக்கைக் காக்கும் பண்பும், சொல்லைச் செயலாக்கும் பக்குவமும்,
மூத்தோர் காலத்தால் பெற்ற செல்வங்கள்.

ரெலெக்ஸ் ரெலிபோன் சேவையில்

குளோபல்

மூத்தவர்கள், முன்னேடிகள்
அநுபவம் வாய்ந்தவர்கள்
எனவேதான்
குளோபல் சேவையில்

வாக்கைக் காக்கும்
பண்பிருக்கும்

சொல்லைச் செயலாக்கும்
பக்குவமிருக்கும்


மக்கள் அபிலாஷைகளைப்
பரிவுடன் புரிந்து ஆற்றும்
சேவைப்பாங்கிருக்கும்

காலத்தின் கோலத்திற்கேற்ற
செயல்திறனிருக்கும்

★ ★ ★

குளோபல்

127, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். | 170, முதலாம் குறுக்குத் தெரு, கொழும்பு 11



கோப்பாய் கல்வி மூலவள நிலையமும் இலங்கை பனை அபிவிருத்தி சபையும் இணைந்து புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியில் நடத்திய கருத்தரங்கு கண்காட்சியின்போது பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே. நடராசா பேசிக்கொண்டிருப்பதையும், அருகில் கருத்தரங்கிற்குத் தலைமை வகித்த முன்னுள் கோப்பாய் பிரதேச சபைத் தலைவர் திரு சதா. லோகேஸ்வரன் (சட்டத்தரணி), கல்வி மூலவள நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். சி. எஸ். சிதம்பரநாதன், சந்தைப்படுத்தும் உத்தியோகத்தர் திரு. வீ. ஈ. சண்முகம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அபிவிருத்தி சங்கங்கள் புனரமைப்பு

(பண்டத்தரிப்பு)

கிராம அபிவிருத்திச் சங்கங்களை புதிய உப விதிகளின் பிரகாரம் புனரமைப்புச் செய்வது தொடர்பாக கிராம அபிவிருத்தி அமைச்சு அண்மையில் அனுப்பியிருந்த சுற்று நிருபத்திற் கிணங்க சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சகல கிராம முன்னேற்றச் சங்கங்களினதும் புனரமைப்பு பொதுக் கூட்டங்களை இம்மாதம் 30ம் திகதிக்கு முன்னர் நடாத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வலி தென்மேற்கு பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு எஸ்.ஜெயக்குமார் உதவி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு எஸ்.சிவகுமாரன் ஆகியோர் இப் புனரமைப்பு பொதுக் கூட்டங்களை நடாத்துவதற்கான ஒழுங்குகளை மேற் கொண்டுள்ளனர்.

இதற்கு முன்னோடியாக இப் பிரிவிலுள்ள 15 கிராம அபிவிருத்திச் சங்கங்களும், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் கலைக்கப்பட்டுள்ளன.

(சூ)




## ரூபவாஹினியில் இன்று

மாலை
5-30 நாட்டுவளம் (சிங்களம்)
5-35 'வூடிவூட் பெக்கர்' கார்ட்டூன் சித்திரம் (ஆங்கிலம்)
6-00 விளையாட்டுப் பயிற்சி (ஜூடோ)
6-30 'ஊரும் உலகும்' (சஞ்சிகை நிகழ்ச்சி)
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 கலையரங்கம்- 'நளன் தமயந்தி' நாட்டிய நாடகம்.
7.45 உலகப்பறவைகள்
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 எதிர்கால நிகழ்ச்சிகள்
8-55 'யெஸ்மினிஸ்ரர்' நகைச்சுவை தொலைக் காட்சிச் சித்திரத் தொடர் (ஆங்கிலம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-59 மேற்கத்திய நடனம்
19-30 உலகச்செய்திகள்
10-35 நடனத் தொடர்ச்சி
10-50 நிகழ்ச்சிகள் முடிவு,

# இன்றைய பலன்

மாதம்-ஆனி
திகதி-11 (25-6-1984)
வாரம்- திங்கள்
திதி- ஏகாதசி காலை 9.48ன் மேல் துவாதசி
நட்சத்திரம்- பரணி முன் இரவு 6-34 வரையும்.

மேடம்: குடும்பத்தில் சுகக் குறைவுகள் தென்படலாம், அதிக அலைச்சலின் மூலம் கவலைகள் உருவாகலாம், முன்னேற்றப்பாதையில் முட்டுக் கட்டை போடுவதற்கு முயற்சிகள் நடைபெறும்;

இடபம்: பொருள் வரவிற்கும் இடமுண்டு. சுற்றுடலில் மதிப்பு உயரும், பெரியவர்களே உங்கள் ஆலோசனைகளைக் கேட்க முன்வருவார்கள், இறையருளுமுண்டு.

மிதுனம்: பெருமையின் நிழல் உங்களைத் தொடரும், உதவிசெய்யப்போய் உபத்திரவத்தை தேடிக்கொள்வீர்கள், அரசபயத்திற்கும் இடமேற்படும் ஆகையால் வழக்கு விவகாரங்களில் ஈடுபடாதிருக்கவும்.

கடகம்: லாபகரமான தொழிலில் முதலீடு செய்வீர்கள், வாகனச் சொந்தக்காரர்களுக்கு அதிக வருமானம் கிடைக்கும், தாய்வழியால் தனவரவுக்கும் இடமுண்டு, குடும்ப வாழ்க்கையில் சுமுகமானநிலை தென்படும்.

சிங்கம்: கனிவான சம்பவங்கள் ஏற்படும், குழந்தை ஒன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத்தரும், தொழில்புரியுமிடத்தில் நல்ல மாற்றங்கள் உண்டு.

கன்னி: நம்பிக்கைமோசடி நடக்கும், வியாபாரத்துறையில் நஷ்டமேற்படலாம், அதிக முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும், சிலருக்கு வாதரோகம் தென்படக்கூடும், உணவுவிடயத்தில் அதிக சுகாதாரம் வேண்டும்,

துலாம்: பிரம்மச்சாரிகள் வாழ்க்கையில் மாரனின்

(7-ம் பக்கம் பார்க்க)

# கைதடிக்கு பேரிழப்பு



கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூகநிலைய கலையரங்கு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம் அது. சிரமதானம் மூலம் கட்டிட வேலைகள் முடிக்கப்படவேண்டும் என்பது நிலைய உறுப்பினர்களின் அவா. இதுசம்பந்தமான ஆலோசனைக்கூட்டம் நிலையத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. யார்... யார்... என்னஎன்ன உதவி செய்யவேண்டுமென்பது பற்றி கலந்துரையாடிக் கொண்டிருந்தோம்...

அப்பொழுது ''நாளைக்கு சிரமதானம் செய்யும் தொண்டர்களுக்கு எனது வீட்டில் சாப்பாடு''.. என்றொரு குரல் கேட்டது. குரல்வந்ததிசையை நோக்கினேன்.. அந்தக்குரலுக்குரியவர் வேறுயாருமல்ல, மறைந்த க. சிவராஜாதான்.

''சித்தி'' என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்பட்டுவரும் சிவராஜாசிறுவயதிலிருந்தே கிராம வளர்ச்சிக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் அயராது உழைத்துவந்தவர். இளகியஉள்ளம், உதவிசெய்கின்ற தயாளசிந்தை, தெய்வபக்தி, விட்டுக்கொடுத்து சமாதானமாக வாழும் எண்ணம்கொண்டவர்.

எமது கிராமத்தில் நடைபெறுகின்ற வைபவங்கள் எதனையும் முன்னின்று நடத்தும் திறமை இவரிடம் உண்டு திருமணவைபவம், மரணச்சடங்கு, கோயில் திருவிழா, சன சமூக நிலைய விழாக்கள் எதிலும் முன்னின்று உழைப்பதோடுவிடாமல் பணமாகவும், பொருளாகவும் இச்சம்பவங்களுக்கு உதவியவர்.

இத்தகைய ஒருவரின் மறைவால் எமது சரஸ்வதி சனசமூக நிலைய உறுப்பினர்களும், கைதடி கிராமமக்களும்சோகத்தில் மூழ்கியுள்ள வேளையில், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்.

—துரை


# வருட மத்தி விசேட விலை குறைப்பு

சகல ஆர்பிக்கோ காட்சி அறைகளிலும்
ஜூன் 25-ந் திகதி முதல் ஜூலை 1-ந் திகதி வரை
காலை 9-00 — மாலை 4-30

10% கழிவு

| | | வழமையான விலை | மலிவு விலை |
|---|---|---|---|
| லேற்றெக்ஸ் போம் மெத்தைகள் | 75 × 36 × 4 | 995-00 | 895-50 |
| | 75 × 42 × 4 | 1200-00 | 1080-00 |
| உருக்கு கப்போர்டுகள் | 72 × 36 × 15 | 2400-00 | 2160-00 |
| ஆவணங்கள் வைக்கும் உருக்கு கபினட்கள் (4 லாச்சிகளுடன்) | | 2350-00 | 2115--00 |
| உருக்குக் கதிரைகள் SFC 1 — UPHOLSTERED | | 285-00 | 256-50 |
| SFC 4 — ALL METAL | | 285-99 | 256-50 |

ஹைட் பார்க் கோணரில் உள்ள விலைக் குறைப்பு சாலையில் விசேட விலைகளில் கிடைக்கும்

FACTORY SECONDS

★ லேற்றெஸ் போம் ★ றிஜீபோம் ★ றப்பர் பாய்கள்
P. V. C. லெதர் துணி வெட்டுத்துண்டுகள்

69, ஹைட்பார்க் கோணர், கொழும்பு 2
& 92, A,. மெயின்வீதி, புறக்கோட்டை.

கண்டி
123, திருகோணமலை வீதி

பதுளை
35, பஜார் வீதி

களுத்துறை
இல 5, கட்டுகுருண்ட

மாத்தளை
245, திருகோணமலை வீதி

யாழ்ப்பாணம்
1-வது மாடி
நவீனசந்தை கட்டிடம்
பெரியகடை

நீர்கொழும்பு
மீமதுரபில்டிங்
46, டி குருஸ் ரேட்

மாத்தறை
101, கொட்டுவேகொட

குருநாகல்
நவின்ன பில்டிங்

அநுராதபுரம்
244, வங்கி பக்கம்

கம்பஹா
15, யக்சல ரேட்

காலி
38, A, கலுவெல்ல

மட்டக்களப்பு
534, முனைவீதி

கதுருவெல
412, மெயின்வீதி

மொறட்டுவ
210, மொறட்டுமுல்ல

இரத்தினபுரி
32, மொறகவறயட்ட

ARPICO

றிச்சார்ட் பீரிஸ் அன் கொம்பனி லிமிட்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - மஞ்சுளா
**அன்பேஆருயிரே**
(கலர்-புதிய பிரதி)

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 2-30, 5-30
**மீண்டும் கோகிலா**

**சாந்தி** (யாழ். நகர்
10-30, 2-30, 4-45, 7-00
Tony Curtis, Elizabeth Taylor
THE MIRROR CRACK'D
Suspense, Murder, Color

**ஶ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
பாக்கியராஜ் - சரிதா
**மௌன கீதங்கள்**

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி-சரிதா
**துணை**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க பல ஆண்டுகளுக்குப் பின்னர் திரையிடப்படுகிறது.
சிவாஜி-சரோஜாதேவி எம். ஆர். ராதா நடித்த
**வளர் - பிறை**
[புதிய பிரதி]

**றீகல்** (யாழ். நகர்)
22nd to 1st
10-30, 2-15, 4-30, 6-30
John Hurt......
**NIGHT CROSSING**
Color
கிழக்கு ஜெர்மனியை சேர்ந்த இரண்டு குடும்பங்கள் சந்தர்ப்பத்தை சாதகமாக்கி, பொலிசாரிடமிருந்து தப்பி வீட்டில் செய்த பலூன் மூலமாக 386 மைல் நீளமான முட்கம்பி வேலியை தாண்டி சுதந்திரமாகின்ற மயிர்க்கூச்செறியும்உண்மைக்கதை
Dont Miss This Film

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 4-45 7-00
Top entertainment of the Day..
New way of Action Karate you have ever sean before
HENRY SANADA-SUE SHIOMI
**SHOGUN'S NINJA**
(Color)
இதுவரைவந்தகராட்டி, குங்பூ படங்களுக்கு மேலான இன்றைய உலகின் முதன்மையான 'NINJITSU' சண்டைக் கலையைக் கொண்ட இன்றைய இளைஞர்கள் பார்க்கவேண்டிய முதல் தர யப்பானியப் படம். குறிப்பிட்ட சில தினங்களுக்குமட்டும்,


# இன்றையபலன்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கணைதாக்கும், காதல் உலகில் கனிவான சம்பங்கள் நடைபெறும், களஸ்திர வழியால் சுகமுண்டு, குடும்பத்தில் பாசத்தின் பிணைப்பு இறுகும்.

விருச்சிகம்: எதிர்பாராத முனையிலிருந்து ஆபத்து உருவாகும், உள்வீட்டிலேயே சிறிய பூசல்கள் தோன்றக் கூடும், இயந்திரங்களுடன் பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும், தெய்வ வழிபாடு விரும்பத்தக்கது.

தனுசு: பெருமையுடன் தலை நிமிர்ந்து வாழுவீர்கள், பிதா வழித் தனமும்சேரும், தான தருமங்களில்ஈடுபாடுஏற்படும், பெரியோர்கள் ஆசிகூறுவார்கள், புகழும் வந்துசேரும்.

மகரம்: வியாபார விருத்திக்கு இடமுண்டு, வெளியிடத் தொடர்புகள் நன்மை தரும், புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும், நீண்டநாள் கடன் நிவர்த்தியாகும்.

கும்பம்: நினைத்த காரியத்தில் வெற்றியுண்டு, எதிர்பாராத வகையில் உங்களுக்கு ஆதரவு பெருகும், பகைத்தவர்களே உங்களைப் பாராட்டச் செய்வார்கள், சுபதினம்.

மீனம்: வாகனம் செலுத்துவோர் அதிக நிதானத்துடன் இருக்கவும், பிரயாணத்தின் போது கவனம் வேண்டும், தொழில் பொறுப்புரியுமிடத்தில் மிகவும் பொறுமையுடன் இருக்கவும், கண்டிப்பானதினம்.

திருமலை
வே. ரவீந்திரன்


**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-15 4-45, 7-00
Sondra Currie in
POLICE WOMEN
(Color-Karate Film)

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சுதாகர், ராதிகா
**கிழக்கேபோகும் ரயில்**

**வின்சர்** (யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-30
2-வது கடைசி மாதம்
எம். ஜி. ஆர். ஜெயலலிதா
**ஒளிவிளக்கு**
(புதிய வண்ணப் பிரதி)

**Building Technological Institute**
**கட்டிடத்தொழில் நுட்பவியல் நிறுவனம்**
(கட்டிடக் கலைஞர்களாலும் பொறியியலாளர்களாலும் நன்மதிப்பைப் பெற்ற ஒரே ஒரு நிறுவனம்)
136, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
**ஆரம்பம் 30-06-84 காலை 10-30 மணி**
1. DIPLOMA IN DRAUGHTSMAN SHIP
2. DIPLOMA IN QUANTITY SURVEYING
(City and Guilds London) (398)
ஆர்வம் உள்ள இருபாலாரும் அனுமதிக்கப்படுவார்கள்

**தொழில் நுட்ப, க. பொ. த (சா. த/உ. த)**
**மாணவர்களுக்கு அரிய சந்தர்ப்பம்**
01. CITY AND GUILDS பரீட்சை 1985
I. ELECT. ENG. TECH. பகுதி I, II, III.
II. TELE COM. TECH, பகுதி I, II, III.
02. கொம்பியூட்டர் I.D.P.M பகுதி I, II, III.
03. AIR CONDITIONING பயிற்சி
ஆரம்பம் 27-06-1984
விபரங்களுக்கு: நிர்வாகி
**AUTO COOL ENGINEERS,**
சாந்தி சினிமாவுக்கு அருகாமையில்
யாழ்ப்பாணம் 429


## 31 வது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

**திருமதி. மு. பர்வதபர்த்தனிப்பிள்ளை**



**மலர்வு: 7-12-1899** **உதிர்வு: 24-5-1984**

எங்கள் குடும்ப ஒளிவிளக்காய் திகழ்ந்த நீங்கள் எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டுப் பிரிந்தாலும் தங்கள் நினைவு எமது நெஞ்சை விட்டகலா. தங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம், மேலும், நேரிலும் செய்திகள்மூலமும் எமது துக்கத்தில் கலந்து, பல வழிகளிலும் உதவி புரிந்தவர்கள் அனைவருக்கும் எமது மனமுவந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரர், பூட்டர்.
வியாபாரிமூலை, பருத்தித்துறை. 487

## 31ம் நாள் அந்தியேட்டி அழைப்பு

**வன்னியசிங்கம் சுப்ரமணியம்**
(முன்னாள் விக்ரேஸ் உரிமையாளர்)



தோற்றம்:
23-05-1931

மறைவு:
28-05-1984

28-5-84 அன்று நடைபெற்ற அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கு நன்றி. அத்துடன் 26-6-84இல் நடைபெறும் வீட்டுக்கிரியைகளில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும்படி வேண்டுகிறோம்.

ஓட்டுமடம் றோட், யாழ்ப்பாணம்.
இங்ஙனம்
மனைவி, உறவினர்.
485


## விற்பனைக்கு

(1) மறுசீர் அமைக்கப்பட்ட 28 அடி கல்நார் இழை மீன்பிடி வள்ளம்.
(2) 25 அடி கல்நார் இழை மீன்பிடி வள்ளம்.
(3) GM இயந்திரம் [MARINE]
பரிவலு – 185
(மின்சார உற்பத்திக்கும் உபயோகிக்கலாம்).

மேற்படி பொருட்களை கொள்வனவுசெய்யவிரும்புவோர் பொருட்களை சீ-நோர் நிறுவனம் காரைநகரில் உள்ள படகு கட்டும் தொழிற்சாலையில் காலை 8 மணிக்கும், மாலை 5 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் [சனி, ஞாயிறு தவிர்ந்த] நாட்களில் பார்வையிடலாம்.

உங்கள் விலை கேள்வியை பொதுமுகாமையாளர் சீ-நோர் நிறுவனம் குருநகர் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 14-7-84க்கு முன் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவும்.

பிரதி பொதுமுகாமையாளர்.

தொலைபேசி : 23604.
குருநகர். 447

## பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்

கீழ் குறிப்பிட்டுள்ளவைகளுக்கு செய்முறை போதனை முறை உட்பட எமது அடுத்த வகுப்புகள் எதிர்வரும் ஞாயிறு 1-07-1984ல் ஆரம்பமாகின்றன.

| | |
|---|---|
| ★ மோட்டார் மெக்கானிஸம் (MOTOR MECHANISM)<br>★ கொம்பியூட்டர் புரோகிறமிங் (COMPUTER PROGRAMMING)<br>★ எலக்றோனிக்ஸ் டிப்புளோமா (DIPLOMA IN ELECTRONICS-CITY and GUILDS PART II)<br>★ மெக்கானிக்கல் எஞ்சினியறிங் வேர்க்ஸ் (MECHANICAL ENGINEERING WORKS)<br>★ எலெக்ரிக்கல் எஞ்சினியறிங் வேர்க்ஸ் (ELECTRICAL ENGINEERING WORKS DIPLOMA) | 6 மாத கால பகுதி நேர வகுப்பு |
| ★ படம் வரைதல் — பில்டர்ஸ் குவான்ரிற்றி உட்பட (DRAFTMAN SHIP — INCLUSIVE OF BUILDERS QUANTITIES) | 6 மாதகால கிழமையில் 5 நாள் வகுப்பு |
| ★ கடைச்சல் யந்திரம் பயிற்சி (LATHE OPERATION) | 4 மாத காலம் |
| ★ வெல்டிங் (ARE WELDING) | 3 மாத காலம் |
| ★ றெவ்றிஜறேஷன் (REFRIGERATION) | 3 மாத காலம் |
| ★ மின் இணைப்பு (ELECTRICAL WIRING) | 1 மாத காலம் |
| ★ நீர் குழாய் இணைப்பு (PLUMBING) | 1 மாத காலம் |

இவ் நிறுவனத்தில் மாத்திரம் விற்கப்படும் விண்ணப்பப் பத்திரத்தில்
**28–06–1984க்கு முன் விண்ணப்பிக்கவும்.**
ஒவ்வொரு வகுப்பிலும் 15 பேர் மட்டுமே சேர்க்கப்படுவர். இவ் 15 பேரும் விண்ணப்பம் முதல் கிடைக்கும் வரிசையிலேயே சேர்க்கப்படுவர். ஆகவே உடன் விண்ணப்பித்து ஏமாற்றத்தை தவிர்க்கவும்.

**பதிவாளர்,**
**பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்**
**59, சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சட்டவிரோத மின் பாவனையால் அநியாயமாக ஓர் உயிர் பலி"

## மரணவிசாரணை அதிகாரி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சட்ட விரோதமாக மின்சாரம் எடுப்போர் மீது யாழ். மாநகர சபை மின்சாரப்பகுதி ஊழியர்கள் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும். சட்ட விரோத மின்சாரம் பாவிப்பால், அநியாயமாக ஒரு உயிர் பலியாகிவிட்டது. இது மற்றவர்களுக்கு ஒரு படிப்பிணையாக இருக்கட்டும்.

அரியாலை சித்திவிநாயகர் கோவில் ஐயர் வைத்தீஸ்வர ஐயர் சதாசிவ சர்மாவின் (28 வயது) மரண விசாரணையின் இறுதியில் யாழ். மரண விசாரணை அதிகாரி திரு. க. கேசவன் மேற்கண்டவாறு எச்சரித்தார்.

கோவில் வீதியில் ஐயருக்கு வீடுகட்டிக் கொடுக்கப்பட்டிருந்ததென்றும் அந்த வீட்டிற்கு மின்சாரம் பெறவில்லை என்றும் இதனல் கடந்த ஐந்து தினங்களாக ஐயர் தினமும் வீதி மின்கம்பத்திலிருந்து சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றுவந்தாரென்றும் நேற்றுக்காலை அவர் மின்சாரம் பெறும்போது வயிரிலிருந்த மின்னெழுக்கினல் தாக்கப்பட்டு குப்புற கிடந்ததாகவும் விசாரணையில் கூறப்பட்டது.

மற்றொரு ஐயர் வயரை தடியால் தட்டிவிட்டு பார்த்தபோது அவர் மயக்க மடைந்து கிடந்ததாகவும் கோவில் தர்மகர்த்தாவான டாக்டர் அருளம்பலம், அச்சமயம் கோவிலில் நின்றதால் அவர் முதலுதவி அளித்தாரென்றும், ஆனலும் அவர் இறந்து விட்டதாகவும் கூறப்பட்டது.

விசாரணை முடிவில் மின்சாரத்தினல் ஏற்பட்ட மரணம் எனத்தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

## கவிதை நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

திரு. அன்ரன் செல்வக்குமார் எழுதிய ''கோடுகளும் கோலங்களும்'' கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் யாழ். தொழில் நுட்ப நிறுவனமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செல்வன் பிறேமானந்தன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அறிமுக உரையும் திரு. எம். ஏ. நுஃமான் ஆய்வுரையும் நடத்தவுள்ளார்கள்.

## விபத்தில் பலியானர்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவிலில் நடந்த லொறி - மோட்டார் சைக்கிள் விபத்தில் நேற்றுப் பிற்பகல் 26 வயதான த. கைலாயநாதன் பலியானர்.

காயமடைந்தவர் உடனடியாக யாழ். அரசினர் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டு அங்கு மரணமானர். [க]

## பெருந்திருவிழா

(சுழிபுரம்)

காரைநகர் துறைமுகம் சித்திரகூடச் சித்திவிநாயகராலய வருடாந்தத் திருவிழா வரும் 26-ம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. ஜூலை 2-ம் திகதி ஏழாம் திருவிழாவன்று மாம்பழத் திருவிழா நடைபெறும், இத்திருவிழாவிற்காக விநாயகரும், தண்டாயுதபாணியும் பலகாடு ஸ்ரீஇராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்திற்கு எழுந்தருள்வர். 3-ம் திகதி எட்டாம் திருவிழாவன்று வேட்டைத் திருவிழாவிற்காக விநாயகர் பாலாவோடை அம்மன் கோவிலுக்கு மாலை எழுந்தருள்வார்.

4-ம் திகதி ஒன்பதாம்திருவிழாவன்று தேர்த்திருவிழாவும், 5-ம் திகதி ஆனி உத்தரத்தன்று தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். தீர்த்தத்திருவிழாவுக்கு விநாயகப்பெருமான் வியாவில் ஐயனர் கோவில் தீர்த்தக்கரைக்கு எழுந்தருள்வார். (ப)

# செய்தித் தணிக்கை

அவசரகாலச்சட்டம் 14 (1) விதிகளுக்கு அமைய பின்வரும் விஷயங்களை பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு முன்னர் ராஜாங்க அமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெறவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

- பயங்கரவாதத்துடன் தொடர்புடைய வன் செயல் பற்றிய நடவடிக்கைகள்.
- கொள்ளை மற்றும் அரசாங்க தனியார் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தல் — தாக்குவோர்— ஆயுதம் தாங்கியவர்களாக இருந்தால்.
- பாதுகாப்புப் படையினர் மேற்கொள்ளும் பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைள் அல்லது பயங்கரவாத நடவடிக்கைகள் பற்றிய விசாரணைகள்.
- கொழும்பில் இஸ்ரேல் நலன்காப்புப் பிரிவு ஏற்படுத்துவதற்கும் அல்லது பாதுகாப்புச் சேவை மற்றும் பொலிஸ் பயிற்சிக்காக எவரிடமாவது உதவி கேட்டலுக்கு எதிரான ஆட்சேபங்கள்.
- தேசிய ஒற்றுமையும் சட்டத்தையும் அல்லது சமுகத்திற்குத் தேவையான விநியோகம், சேவைகள் போன்றவற்றை பாதிக்கக்கூடிய விஷயங்கள்.

## ஏழாலை இரட்டை கொலை;

# சந்தேக நபர்கள் ஐவர் ரிமாண்டில்!

[மாவிட்டபுரம்]

ஏழாலை மேற்கில் இரு குடும்பங்களிடையே மூண்ட மோதலில் இருவர் வாள்வெட்டுக்கிலக்காகி கொலையுண்டது தொடர்பாக 5 சந்தேக நபர்கள் கைதாகிறிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஏழாலை மேற்கைச் சேர்ந்த இரு குடும்பங்களிடையே பழைய பகைமை காரணமாக ஏற்பட்ட மோதலில் அப்புக்குட்டி தர்மலிங்கம் பெரியார் கந்தையா ஆகிய இருவர் வாள் வெட்டுக்கிலக்காகி கொலையுண்டதுடன் மேலும் நால்வர் படுகாயமடைந்தனர்,

இச்சம்பவம் தொடர்பாக விசாரணையிலீடுபட்ட சுன்னகம் பொலிசார் அப்புக்குட்டி தர்மலிங்கம் கொலை தொடர்பாக பெரியார் செல்லத்துரை தளையசிங்கம் சத்தியசீலன் ஆகியோரை கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். இரண்டாவது சந்தேகநபர் யாழ். ஆஸ்பத்திரியில்சிகிச்சைபெற்று வருவதாகவும்பொலிசார் தெரிவித்தனர்.

அடுத்து பெரியார் கந்தையா கொலை தொடர்பாக தர்மலிங்கம் பாலசிங்கம், தர்மலிங்கம் கணேசுலிங்கம் அல்லது கணேசன், தர்மலிங்கம் ஞானேஸ்வரன் அல்லது ஆனந்தன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர்.

இரு கொலைச்சம்பவங்கள் தொடர்பாகவும் மேற்படி 5 சந்தேகநபர்களையும் ஜூலை 3-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் உத்தர விட்டார்,

தர்மலிங்கம் கொலைச் சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினமும், கந்தையா கொலைச் சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி எம். ஸ்ரீதரனும் ஆஜராஞர்கள். (க)

## கரையோர....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நோயாக இருக்கலாமெனக் கருதி வைத்திய அதிகாரிகளும் சுகாதாரப் பகுதியினரும் ஆய்வு நடத்திய சமயம் நெருப்புக் காய்ச்சல் தான் என்று உறுதியாக கூறமுடியாத நிலையிலிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த காய்ச்சல் பரவி வருவது குறித்து காங்கேசன் துறை சுகாதார வைத்திய அதிகாரி திரு இ.தெய்வேந்திரனின்கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டதையடுத்து அவர் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல சேவையாளர்கள் ஆகியோரை மேற்படி கிராமங்களுக்கு அனுப்பி தடுப்பு நடவடிக்கைகளைமேற்கொள்ள ஏற்பாடு செய்துள்ளார்.

தடுப்பூசி ஏற்றுதல், கிணறுகளுக்கு குளோறின் போடுதல் ஆகிய நடவடிக்கைகள் இக்கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (க)

## குமாரசாமி...

(5ம் பக்கம் பார்க்க)

அனைவரினதும் அன்பையும், மதிப்பையும் பெற்ருர். மாணவர்கள் ஒழுக்கசீலர்களாகவாழ வேண்டும் என்று அரும்பாடுபட்டார். கல்லூரியிலுள்ள பழைய கோவிலைப் புனரமைத்து மாணவர்கள் மத்தியில் தெய்வவழிபாடு, கடவுள் நம்பிக்கை பரவ வழிசெய்தார். கல்லூரியில் நிறைவான ஒரு விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டுமென்று அயராது பாடுபட்டார். அவரது ஆவலை நாம் பூர்த்திசெய்வதே அவருக்கு நாம் செய்யும் கைமாருகும்.'' (கு)

## இளம்பெண் ரயிலுக்குப்பலி

(கிளிநொச்சி)

முருகண்டி 3-ம் கட்டையில் 20 வயதான இளம்பெண் ஒருவர் ரயிலுக்கு பலியானர். இப்பெண்ணின் சடலம் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

இவரது சடலம் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சடலம் சிதைந்தநிலையில் காணப்பட்டது.

## லலித்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வகுப்புக்களை பகிஷ்கரிப்பதா? அல்லது பகிஷ்கரிப்பை கைவிடுவதா? என்பது பற்றியும் இது தொடர்பாக அடுத்து எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் குறித்தும் மாணவர் இன்று தீர்மானிப்பார்கள் என்றும் அந்த மாணவர் பிரதிநிதி தெரிவித்தார்.

இதே நேரத்தில் முக்கியமான சில கோரிக்கைகள் குறித்து நேற்று அமைச்சர் லலித்தும் அரசு அதிகாரிகளும், மாணவர்கள் பிரதிநிதிகளும் 'மனம்விட்டு' பேசினர் என்று தெரிவிக்கப்பட்டது.

### கடற்றெழிலாளர் பிரச்னை

கடற்றெழிலாளர் பிரச்னை குறித்து நடைபெற்ற பேச்சுவார்த்தையில், கடல் எல்லை மேலும் இரண்டு மைல்களுக்கு விஸ்தரிக்கவேண்டுமென்றும் ஆழமான கடல் பகுதிக்குச் செல்லும் போது பாதுகாப்பு வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது

## மூதாட்டி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களப்புநோக்கி வந்துகொண்டிருந்தஇ.போ.ச,பஸ் ஒன்றுபின் பக்கமாக வந்து மோதியதினல் இருவரும் காயமடைந்தனர். பின்னர் இவர்கள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டபோது மூதாட்டி ஆஸ்பத்திரியில் மரணமானர். வண்டில் சாரதியும் மாடுகளும் 25யார் தூரத்தில் தூக்கி வீசப்பட்டபோதும் காயமேதும் ஏற்படவில்லை

இது தொடர்பாக மரண விசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்தார் பஸ்சாரதி தேவசிங்கம் காவலில் வைக்கம்பட்டுள்ளார். (சூ)

கிளிநொச்சி மரணவிசாரணை அதிகாரி மு. யோகலிங்கம், மரண விசாரணையை நடத்திஞர். மாவட்டவைத்திய அதிகாரி பி. நவரத்தினராசா பிரேத பரிசோதனை செய்தார். விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (க)

## பாடசாலை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பந்தோபஸ்து அமைச்சரும், பதில் பாதுகாப்பு அமைச்சருமான லலித்அத்துலத் முதலி விடுத்துள்ள அறிக்கையில் ''இன்றையதினம் மாணவர்கள் மத்தியில் வன்செயல்களை தூண்டிவிட சில சக்திகள் முயற்சி செய்து வருவதாகவும் இது தொடர்பாக ஏற்படும் எந்தப் பிரச்னையையும் சமாளிக்க அரசாங்கம் தயாராக வுள்ளதாகவும்'' தெரிவித்துள்ளார். ]சூ]


## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னம்மா பொன்னப்பா

உடுவில்ருேட், மானிப்பாயைச் சேர்ந்த திருமதி பொன்னப்பா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற பொன்னப்பாவின் அன்பு மனைவியும், தவபாலன், தவயோகம் ஆகியோரின் அன்புத் தாயாரும், கருணு, அழகசுந்தரம் ஆகியோரின் மாமியும் ஆவார். அன்னரின் பூதவுடல் பிப்பிரி சேமக்காலைக்கு 26-06-84 காலை 7-30 மணி ஆராதனையின்பின் 8-00 மணிக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும் உற்ருர் உறவினர் நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 489

## மரண அறிவித்தல்

### ப. பரமேஸ்வர ஐயர்

காலஞ்சென்ற கொழும்பு சரஸ்வதி புத்தகசாலை அதிபர் பத்மநாப ஐயரின் மூத்தமகனும், வட்டுக் கோட்டை மனேன்மணியம்மாளின் அன்புக்கணவரும், திருமதி சுகன்யா, மங்களேஸ்வரன், கல்யாணி, கிரிஜா ஜானகி, ஆனந்தி, கமலேஸ்வரி, வித்யா, ஸ்ரீரமணன் ஆகியோரின் அன்புத்தந்தையும், மீனட்சிசுந்தரம் Research Office Nara Institute கொழும்பு, அவர்களின் அன்புமாமனரும், சர்வேஸ்வர ஐயர் (உப அதிபர், வட்டு இந்துக்கல்லூரி), தியாகராஜக் குருக்கள்( ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமிகோவில்) ஆகியோரின் அன்புச்சகோதரரும், பேராசிரியர் கைலாசநாதக்குருக்கள் (யாழ் பல்கலைக்கழகம்), இரத்தினகைலாசநாதக் குருக்கள் (நல்லூர் சிவன்கோவில், முன்னேஸ்வரம் தேவஸ்தானங்களின் பிரதம குருக்கள்) ஆகியோரின் அன்பு மருமகனும், வட்டுக்கோட்டையைச்சேர்ந்த நாகராசசர்மா, கண்ணலிங்க சர்மா, காலஞ்சென்ற இராமச்சந்திரசர்ம, திருமதி பாலம்சகாயம் (திருச்சி) கணேசசர்மா, திருமதி சரோஜினி அம்மாள் ஆகியோரின் மைத்துனருமான பரமேஸ்வர ஐயர் T. K. Trades, K. K. S. Road, 24-6-84 ஞாயிற்றுக்கிழமை காலமானர். ஈமக்கிரியைகள் நல்லூரிலுள்ள அன்னரின் இல்லத்தில் இன்று நடைபெற்று மாலை 3 மணியளவில் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

270, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

490


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜூன் மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org